ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

## நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழி

# 1.9 – இவையும் அவையும்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஶ்ரீ:

ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

ஶ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# 1.9 – இவையும் அவையும்

‡ இவையும் அவையும் உவையும் ⋆
இவரும் அவரும் உவரும் ⋆
எவையும் யவரும் தன் உள்ளே ⋆
ஆகியும் ஆக்கியும் காக்கும் ⋆
அவையுள் தனி முதல் எம்மான் ⋆
கண்ண பிரான் என் அமுதம் ⋆
சுவையன் திருவின் மணாளன் ⋆
என்னுடைச் சூழல் உளானே ॥ **1.9.1** ॥

சூழல் பல பல வல்லான் ⋆
தொல்லையம் காலத்துலகை ⋆
கேழல் ஒன்றாகி இடந்த ⋆
கேசவன் என்னுடை அம்மான் ⋆
வேழ மருப்பை ஒசித்தான் ⋆
விண்ணவர்க்கெண்ணல் அரியான் ⋆
ஆழ நெடும் கடல் சேர்ந்தான் ⋆
அவன் என் அருகல் இலானே ॥ **1.9.2** ॥

அருகல் இலாய பெரும் சீர் ⋆
அமரர்கள் ஆதி முதல்வன் ⋆
கருகிய நீல நன் மேனி வண்ணன் ⋆
செந்தாமரைக் கண்ணன் ⋆
பொரு சிறைப் புள் உவந்தேறும் ⋆

பூ மகளார் தனிக் கேள்வன் ⋆
ஒரு கதியின் சுவை தந்திட்டு ⋆
ஒழிவிலன் என்னோடுடனே ‖ **1.9.3** ‖

உடன் அமர் காதல் மகளிர் ⋆
திருமகள் மண் மகள் ஆயர் மட மகள் ⋆
என்றிவர் மூவர் ஆளும் ⋆
உலகமும் மூன்றே ⋆
உடன் அவை ஒக்க விழுங்கி ⋆
ஆல் இலைச் சேர்ந்தவன் எம்மான் ⋆
கடல் மலி மாயப் பெருமான் ⋆
கண்ணன் என் ஒக்கலையானே ‖ **1.9.4** ‖

ஒக்கலை வைத்து முலைப் பால் உண் என்று ⋆
தந்திட வாங்கி ⋆
செக்கம் செக அன்றவள் பால் ⋆
உயிர் செக உண்ட பெருமான் ⋆
நக்க பிரானோடு ⋆
அயனும் இந்திரனும் முதலாக ⋆
ஒக்கவும் தோற்றிய ஈசன் ⋆
மாயன் என் நெஞ்சின் உளானே ‖ **1.9.5** ‖

மாயன் என் நெஞ்சின் உள்ளான் ⋆
மற்றும் யவர்க்கும் அதுவே ⋆
காயமும் சீவனும் தானே ⋆
காலும் எரியும் அவனே ⋆
சேயன் அணியன் யவர்க்கும் ⋆
சிந்தைக்கும் கோசரம் அல்லன் ⋆

தூயன் துயக்கன் மயக்கன் ⋆
என்னுடைத் தோள் இணையானே ॥ **1.9.6** ॥

தோள் இணை மேலும் நன் மார்பின் மேலும் ⋆
சுடர் முடி மேலும் ⋆
தாள் இணை மேலும் புனைந்த ⋆
தண்ணம் துழாய் உடை அம்மான் ⋆
கேள் இணை ஒன்றும் இலாதான் ⋆
கிளரும் சுடர் ஒளி மூர்த்தி ⋆
நாள் அணைந்தொன்றும் அகலான் ⋆
என்னுடை நாவின் உளானே ॥ **1.9.7** ॥

நாவினுள் நின்று மலரும் ⋆
ஞானக் கலைகளுக்கெல்லாம் ⋆
ஆவியும் ஆக்கையும் தானே ⋆
அழிப்போடளிப்பவன் தானே ⋆
பூ இயல் நால் தடம் தோளன் ⋆
பொரு படை ஆழி சங்கேந்தும் ⋆
காவி நன் மேனிக் கமலக் கண்ணன் ⋆
என் கண்ணின் உளானே ॥ **1.9.8** ॥

கமலக் கண்ணன் என் கண்ணின் உள்ளான் ⋆
காண்பன் அவன் கண்களாலே ⋆
அமலங்கள் ஆக விழிக்கும் ⋆
ஐம் புலனும் அவன் மூர்த்தி ⋆
கமலத்தயன் நம்பி தன்னைக் ⋆
கண் நுதலானொடும் தோற்றி ⋆

அமலத் தெய்வத்தோடுலகம் ஆக்கி ⋆
என் நெற்றி உளானே ‖ **1.9.9** ‖

நெற்றியுள் நின்றென்னை ஆளும் ⋆
நிரை மலர்ப் பாதங்கள் சூடி ⋆
கற்றைத் துழாய் முடிக் கோலக் ⋆
கண்ண பிரானைத் தொழுவார் ⋆
ஒற்றைப் பிறை அணிந்தானும் ⋆
நான்முகனும் இந்திரனும் ⋆
மற்றை அமரரும் எல்லாம் வந்து ⋆
எனதுச்சி உளானே ‖ **1.9.10** ‖

‡ உச்சி உள்ளே நிற்கும் தேவ தேவற்குக் ⋆
கண்ண பிராற்கு ⋆
இச்சை உள் செல்ல உணர்த்தி ⋆
வண் குருகூர்ச் சடகோபன் ⋆
இச்சொன்ன ஆயிரத்துள் ⋆
இவையும் ஓர் பத்தெம்பிராற்கு ⋆
நிச்சலும் விண்ணப்பம் செய்ய ⋆
நீள் கழல் சென்னி பொருமே ‖ **1.9.11** ‖

அடிவரவு — இவையும் சூழல் அருகல் உடனமர் ஒக்கலை மாயன் தோளிணை நாவினுள் கமல நெற்றியுள் உச்சியுள் பொருமா

இவையும் அவையும் முற்றிற்று

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்